மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் நாள் வியாழக்கிழமை
இ.ம.எண்.11/2024
அ.வ.எண்.270/2015

1. சரோஜா (இறந்தவர்)
2. நாகலஷ்மி
3. S.M.மணி (இறந்தவர்) ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. மல்லிகா (இறந்தவர்)
2. செல்வம்
3. குமார்
4. சாரதா
5. சக்தி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 12.02.2025 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு 1, 3 மனுதாரர்கள் இறந்தவர்களாகவும், 2 ம் மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.கோபிநாத் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் இறந்தவராகவும், 2 ம் எதிர்மனுதாரர் தோன்றாதரப்பினராக்கப்பட்டும், 3, 4 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.மோகன்ராம் அவர்கள் ஆஜராகியும், 5 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.G.ராமசந்திரன் அவர்கள் ஆஜராகியும், 3, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரையின் அடிப்படையில் உத்தரவு பிறப்பிக்கலாம் என மேற்குறிப்பு செய்துள்ள நிலையிலும், 5 ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்துள்ள நிலையிலும், மனுதாரர்கள் தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17, 18 மற்றும் பிரிவு 151ன் கீழ் மனுவில் கண்டுள்ளவாறு அசல் வழக்கில் திருத்தங்கள் செய்ய

அனுமதியளிக்க உத்தரவிடக் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

1) மனுவின் சுருக்கம் : –

(i) மனுதாரர்கள்/வாதிகளால் பாகப்பிரிவினை, சுவாதீனம் மற்றும் அடமான தொகை மீட்பு, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் சொத்துகளை பாகப்பிரிவினை செய்ய வேண்டி கடந்த 29.09.2012ம் தேதியில் மனுதாரர்களும், மனுதாரர்களின் தாயாரும் சேர்ந்து அடமான கடன் தொகை ரூ.99,750/–ஐ செலுத்தி தாவா சொத்தை அடமானத்திலிருந்து மீட்டனர். வழக்கு நிலுவையில் இருக்கும்போது கடந்த 09.05.2021ம் தேதியில் 1ம் பிரதிவாதி இறந்துவிட்டதால் அவரது வாரிசுதாரர் 4ம் பிரதிவாதியாக அசல் வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டார்.

(ii) அதேபோல் கடந்த 08.01.2022ம் தேதியில் 1ம் வாதி, 2ம் மனுதாரரையும், 3ம் மனுதாரரையும், ஒரு சக்தி என்பவரையும் வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். இந்நிலையில் மேற்படி சக்தி என்பவர் 2, 3 மனுதாரர்களுடன் சேர்ந்து வழக்கை மேல்நடத்த வராததால், மேற்படி நபரை அசல் வழக்கில் 5ம் பிரதிவாதியாக சேர்க்க அனுமதி கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.07/2022 என்ற மனு இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது. இதற்கிடையில் 3ம் எதிர்மனுதாரர் கடந்த 22.11.2022ம் தேதியில் 2ம் மனுதாரரையும், 5ம் பிரதிவாதியையும் தன் வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார்.

(iii) ஆகவே மேற்படி சக்தி என்பவரை தாவாவில் 5ம் பிரதிவாதியாக சேர்த்தும், இறந்த 3ம் மனுதாரர்/3ம் வாதியின் இறப்பு குறித்தும், 5ம் பிரதிவாதிக்கும் தாவா சொத்தில் பாக உரிமை உள்ளதால், பாகவிகிதம் குறித்தும், வழக்குரையில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ள அனுமதி அளிக்க கோரி 2ம் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவை அனுமதிப்பதால் வழக்கின் தன்மையில் எவ்வித

மாற்றமும் ஏற்படாது. 2ம் மனுதாரர் கோரும் திருத்தப்பாடுகள் விளைவுறு திருத்தப்பாடுகள் விளைவுறு திருத்தத்தப்பாடுகள் ஆகும். எனவே வழக்குரையில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ள அனுமதிக்க கோரி மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>2) 4ம் எதிர்மனுதாரால் தாக்கல் செய்யப்பட்டு, 3ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

(i) மனு பொய்யானது, சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்பதும், மனுதாரர்களும், எதிர்மனுதாரர்களும் தாவா சொத்துக்களை பாகம் பிரிக்காமல் கூட்டாக அனுபவித்து வந்தனர் என்பதும் தவறானதாகும். தாவா சொத்துக்களின் பேரிலான அடமான கடனை 2ம் மனுதாரர் அடைத்ததாக கூறுவது பொய்யானதாகும். வழக்கு நிலுவையில் இருக்கும்போது 1ம் வாதி, 2, 3 மனுதாரர்களையும், 5ம் எதிர்மனுதாரரையும் வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்பது உண்மையே. 2ம் மனுதாரர் கோரும் திருத்தப்பாடுகள் விளைவுறு திருத்தப்பாடுகள் என்பது தவறானதாகும்.

(ii) 1ம் வாதியால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரையில் தாவா சொத்தை அடமானத்திலிருந்து மீட்க 2ம் மனுதாரர்/2ம் வாதி பணம் கொடுத்ததாக சொல்லப்படவில்லை. அவ்வாறு உள்ள நிலையில், தற்போது தானும் பணம் கொடுத்ததாக ஒரு புதுக்கதையை உருவாக்குகிறார். திருத்தப்பாட்டு மனுவில் கண்டுள்ள பாகவிகித அளவுகள் தவறானவை. இவ்வழக்கில் வழக்கு விசாரணை துவங்கப்படவில்லை என்பது தவறானது. ஏற்கனவே 1ம் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவரது சாட்சியம் நீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்டுள்ளது. வழக்கை காலதாமதப்படுத்த வேண்டி 2ம் மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். எனவே இம்மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 3, 4 எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) மனுதாரர்கள் தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், 1ம் எதிர்மனுதாரர் இறந்தவராகவும், 2ம் எதிர்மனுதாரர் தோன்றாதரப்பினராகவும், 3, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரையின் அடிப்படையில் உத்தரவு பிறப்பிக்கலாம் என மேற்குறிப்பு செய்துள்ள நிலையிலும், 5ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்துள்ள நிலையிலும், மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு:–

(i) மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள்/வாதிகளால் பாகப்பிரிவினை, சுவாதீனம் மற்றும் அடமான தொகை மீட்பு, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றும், வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் சொத்துகளை பாகப்பிரிவினை செய்ய வேண்டி கடந்த 29.09.2012ம் தேதியில் மனுதாரர்களும், மனுதாரர்களின் தாயாரும் சேர்ந்து அடமான கடன் தொகை ரூ.99,750/–ஐ செலுத்தி தாவா சொத்தை அடமானத்திலிருந்து மீட்டனர் என்றும், வழக்கு நிலுவையில் இருக்கும்போது கடந்த 09.05.2021ம் தேதியில் 1ம் பிரதிவாதி இறந்துவிட்டதால் அவரது வாரிசுதாரர் 4ம் பிரதிவாதியாக அசல் வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டார் என்றும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(ii) அதேபோல் கடந்த 08.01.2022ம் தேதியில் 1ம் வாதி, 2ம் மனுதாரரையும், 3ம் மனுதாரரையும், ஒரு சக்தி என்பவரையும் வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்றும், இந்நிலையில் மேற்படி சக்தி என்பவர் 2, 3 மனுதாரர்களுடன் சேர்ந்து வழக்கை மேல்நடத்த வராததால், மேற்படி நபரை அசல் வழக்கில் 5ம் பிரதிவாதியாக சேர்க்க அனுமதி கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.07/2022 என்ற மனு இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது என்றும், இதற்கிடையில் 3ம் மனுதாரர்

கடந்த 22.11.2022ம் தேதியில் 2ம் மனுதாரரையும், 5ம் பிரதிவாதியையும் தன் வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்றும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(iii) ஆகவே மேற்படி சக்தி என்பவரை தாவாவில் 5ம் பிரதிவாதியாக சேர்த்தும், இறந்த 3ம் மனுதாரர்/3ம் வாதியின் இறப்பு குறித்தும், 5ம் பிரதிவாதிக்கும் தாவா சொத்தில் பாக உரிமை உள்ளதால், பாகவிகிதம் குறித்தும், வழக்குரையில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ள அனுமதி அளிக்க கோரி 2ம் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இம்மனுவை அனுமதிப்பதால் வழக்கின் தன்மையில் எவ்வித மாற்றமும் ஏற்படாது என்றும், 2ம் மனுதாரர் கோரும் திருத்தப்பாடுகள் விளைவுறு திருத்தப்பாடுகள் விளைவுறு திருத்தத்தப்பாடுகள் என்றும், எனவே வழக்குரையில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ள அனுமதிக்க கோரி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(iv) 3, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்பதும், மனுதாரர்களும், எதிர்மனுதாரர்களும் தாவா சொத்துக்களை பாகம் பிரிக்காமல் கூட்டாக அனுபவித்து வந்தனர் என்பதும் தவறானது என்றும், தாவா சொத்துக்களின் பேரிலான அடமான கடனை 2ம் மனுதாரர் அடைத்ததாக கூறுவது பொய்யானது என்றும், வழக்கு நிலுவையில் இருக்கும்போது 1ம் வாதி, 2, 3 மனுதாரர்களையும், 5ம் எதிர்மனுதாரரையும் வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்பது உண்மையே என்றும், 2ம் மனுதாரர் கோரும் திருத்தப்பாடுகள் விளைவுறு திருத்தப்பாடுகள் என்பது தவறானது என்றும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(v) மேலும் 1ம் வாதியால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரையில் தாவா சொத்தை அடமானத்திலிருந்து மீட்க 2ம் மனுதாரர்/2ம் வாதி பணம் கொடுத்ததாக சொல்லப்படவில்லை என்றும், அவ்வாறு உள்ள நிலையில், தற்போது தானும் பணம் கொடுத்ததாக ஒரு புதுக்கதையை உருவாக்குகிறார் என்றும், திருத்தப்பாட்டு மனுவில் கண்டுள்ள பாகவிகித அளவுகள் தவறானவை என்றும், இவ்வழக்கில் வழக்கு விசாரணை துவங்கப்படவில்லை என்பது தவறானது என்றும், ஏற்கனவே 1ம் வாதி

வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவரது சாட்சியம் நீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கை காலதாமதப்படுத்த வேண்டி 2ம் மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(vi) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில், மனுதாரர்கள்/வாதிகள் பாகப்பிரிவினை, சுவாதீனம் மற்றும் அடமான தொகை மீட்பு, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. மனு பிரமாணப்பத்திரிக்கை மற்றும் எதிருரையை கவனமாக பரிசீலனை செய்கையில், 1ம் வாதி, 2, 3 மனுதாரர்களையும், 5ம் பிரதிவாதியையும் வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்பதையும், பின்னிட்டு 3ம் மனுதாரர், 2ம் எதிர்மனுதாரரையும், 5ம் பிரதிவாதியையும் வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்பதையும், 3, 4 எதிர்மனுதாரர்கள் ஒப்புக் கொள்வது தெரிய வருகிறது. அவ்வாறு உள்ள நிலையில், இறந்த நபர்கள் குறித்து 2ம் மனுதாரர் கோரும் திருத்தப்பாடானது விளைவுறு திருத்தப்பாடு என்பதால், மேற்படி திருத்தப்பாடுகள் அனுமதிப்பதால் 3, 4 எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித பாதகமான சூழலும் ஏற்பட வாய்ப்பில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(vii) அதேபோல் 1ம் வாதி இறந்துவிட்ட நிலையிலும், 1ம் பிரதிவாதி இறந்துவிட்ட நிலையிலும், மேற்படி நபர்களின் வாரிசுதாரர்கள் தாவாவில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ள நிலையிலும், தாவா பரிகாரத்தில் கோரப்பட்டுள்ள பாகவிகிதங்களில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது தெரியவருகிறது. ஆகையால் மேற்படி பாகவிகிதங்களை மனுதாரர் கோரும் திருத்தங்களும் விளைவுறு திருத்தப்பாடுகளே என இந்நீதிமன்றம் கருதுகிறது. அதே சமயத்தில், 3, 4 எதிர்மனுதாரர்கள் முன்வைக்கும் பிரதான எதிர்வாதம் யாதெனில், 1ம் வாதி தாக்கல் செய்த அசல் வழக்கிலேயே தாவா சொத்து குறித்த அடமான கடனை செலுத்த 2ம் மனுதாரர் பணம் கொடுத்ததாக எவ்வித சங்கதியும் குறிப்பிடப்படாத நிலையில், 1ம் வாதியின் இறப்பிற்கு பின் அவரது வாரிசுதாரர் என்ற அடிப்படையில் இவ்வழக்கில் பின்னிட்டு சேர்க்கப்பட்டுள்ள 2ம்

மனுதாரர்/2ம் வாதி தானும் காலம்சென்ற 1ம் வாதியும் தான் மேற்படி அடமான கடனை செலுத்தி தாவா சொத்தை மீட்டதாக ஒரு புதிய சங்கதியை நிரூபித்து திருத்தப்பாடுகள் கோருவது ஏற்கத்தக்கதல்ல என கூறியுள்ளது தெரியவருகிறது.

(viii) மேற்கண்ட எதிர்வாதத்தை பரிசீலனை செய்கையில், இந்நீதிமன்றம் கருத்தில் கொள்வது யாதெனில், வழக்கை தாக்கல் செய்த 1ம் வாதியே தாவா சொத்தின் பேரிலான அடமான கடனை தான் தான் அடைத்ததாக கூறி வழக்குரை சங்கதிகளை முன்வைத்து வழக்கை நடத்தி வந்துள்ள நிலையிலும், மேற்படி 1ம் வாதி இவ்வழக்கில் இறந்துவிட்ட நிலையிலும், அவரது வாரிசுதாரர் என்ற அடிப்படையில் இவ்வழக்கில் 2ம் வாதியாக சேர்ந்துள்ள 2ம் மனுதாரர் இறந்த 1ம் வாதியால் வழக்குரையில் முன்னிடப்பட்டுள்ள சங்கதிகளுக்கு முரணாக புதிய சங்கதிகள் எதையும் முன்வைக்க இயலாது என்பது உண்மையே. இருப்பினும் தற்போது 2ம் மனுதாரர் மேற்படி தாவா கடனை தன் தாயாரான 1ம் வாதியுடன் சேர்ந்து தானும் அடைத்ததாக முன்வைக்கும் புதிய சங்கதியானது ஏற்கனவே 1ம் வாதியால் முன்னிடப்பட்டுள்ள வழக்கின் தன்மையையோ, வழக்குமூலத்தையோ, அடிப்படை வழக்கையோ, எவ்விதத்திலும் பாதிப்பதாக அமையவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(ix) மேற்படி 1ம் வாதி தன் வழக்குரையில் அடமான கடனை தான் செலுத்தி தாவா சொத்தை மீட்டதாக சொல்லும் நிலையில், தற்போது 2ம் வாதியான 2ம் மனுதாரர் தானும் 1ம் வாதியுடன் சேர்ந்து தாவா கடனை அடைத்ததாக தற்போது முன்வைக்கும் புதிய சங்கதியை நிரூபிக்கும் நிரூபண சுமையானது 2ம் மனுதாரரையே சார்ந்ததாகும். ஒரு வேளை 2ம் மனுதாரர் மேற்படி சங்கதிகளை நிரூபிக்கும் பட்சத்தில், மேற்படி 2ம் மனுதாரர் கோரும் தொகையை பெற மனுதாரருக்கு மட்டுமே உரிமையுள்ளதா? அல்லது 1ம் வாதியின் மற்றொரு வாரிசான 5ம் பிரதிவாதிக்கும் உரிமையுள்ளதா? என்பது குறித்து அசல் வழக்கில் சாட்சிய, சான்றாவணங்களின் அடிப்படையில் தான் தீர்மானிக்க இயலும் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(x) தற்போது மேற்படி சங்கதியை பொறுத்து திருத்தப்பாடுகள் மேற்கொள்வதாலேயே மனுதாரர் மேற்படி சங்கதிகள் நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது என்பதையும் இந்நீதிமன்றம் கருதுகிறது. அதே சமயத்தில் மேற்படி திருத்தப்பாடுகள் குறித்து கூடுதல் பதிலுரை தாக்கல் செய்யவும், அது தொடர்பாக வழக்கு விசாரணையின்போது சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யவும், 2ம் மனுதாரரது வழக்கை மறுத்தளிக்கவும், 3, 4 எதிர்மனுதாரர்களுக்கு உரிய வாய்ப்பு வழங்கப்படும் என்பதை கருத்தில் கொள்கையிலும், 2ம் மனுதாரர் கோரும் திருத்தப்பாடுகள் தரப்பினரிடையே உள்ள உண்மையான பிரச்சனைக்கு தீர்வு காண வழிவகுக்கும் வகையில் உள்ளதையும் கருத்தில் கொள்கையிலும், இம்மனுவை அனுமதிப்பதால், எதிர்மனுதாரர்களின் எதிர்வாதத்திற்கு எவ்வித குந்தகமும் எழாது என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே மேற்கண்ட விவாதங்களின் அடிப்படையில் இம்மனுவை செலவுத்தொகையின்றி அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2025.03.13 10:45:28 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை</u>

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை</u>

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2025.03.13 10:45:34 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.